செய்தி வெளியீடு எண் : 445 நாள்: 21.03.2022

**அனைத்து இங்கிலாந்து இறகுப் பந்தாட்டத் தொடரில் இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதிபெற்ற லக்ஷ்யா சென் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி**

அனைத்து இங்கிலாந்து இறகுப் பந்தாட்டத் தொடரில் மிக இளம் வயதிலேயே லக்ஷ்யா சென் படைத்துள்ள சாதனை கண்டு பெருமை கொள்கிறேன்.

மதிப்புமிகுந்த இந்த அனைத்து இங்கிலாந்து இறகுப் பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதிபெற்ற ஐந்தாவது இந்திய வீரர் எனப் பெயரெடுத்த லக்ஷ்யா சென் அவர்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றிக்கு மிக அருகில் வந்து அதைத் தவறவிட்டுள்ளார்.

வருங்காலத்தில் அவர் சிறப்பான வெற்றிகளைக் குவித்திட எனது வாழ்த்துகள்.

Very proud of what Lakshya Sen has achieved in All England Open Badminton Championships 2022 at this young age.

Becoming only the fifth Indian to reach the final of the prestigious tournament, he came very close to scripting history.

I wish him all the best for his future.

•••••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**